**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons), மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2025– ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17–ம் நாள் வெள்ளிக்கிழமை**

**IA 4/2022**

**in**

**OS no.221/2019**

---

இந்திரா ......மனுதாரர்/வாதி

**/எதிர்/**

ஜெயா ஹக்சர் .....எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 09.10.2025–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.குருதாஸ் அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.T.முத்துராமலிங்கம், திரு.P.ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும் ஆவணங்கள் பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள 12.10.1960ம் தேதியிட்ட 2775/1960 ஆவணம் மற்றும் 27.06.1966ம் தேதியிட்ட 847/1996 ஆவணம் ஆகியவற்றின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி உ.ந.மு.ச. கட்டளை 12 விதி 14ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்/வாதி தரப்பு மனுவின் சுருக்கம்:**

அசல் வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 1961ம் ஆண்டு, ஊர்காவலன், காளியம்மாள் என்பவருக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் மற்றும் 1966ம் ஆண்டு காளியம்மாள் ஆதித்தனார் கல்விக் அறக்கட்டளைக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஆவணங்கள் எதிர்மனுதாரர்களால் இதுவரை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், மேற்படி ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்கள் வேறொருவரால் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும், எனவே மேற்படி ஆவணங்களில் உள்ள காளியம்மாள், ஊர்காவலன் ஆகியோரது கையெழுத்துக்களை உறுதி செய்யவேண்டி மேற்படி ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு எதிருரை சுருக்கம்:–**

மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், 16.04.2018ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் 12.10.1960 மற்றும் 27.06.1966ம் தேதிய ஆவணங்கள் பற்றி தெளிவாக கூறப்பட்டுள்ளது என்றும், அவை பொது ஆவணமாக இருக்கும் நிலையில் மனுதாரர் அவற்றை சார்பதிவக

VENKADESHPRASANTH

Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.10.17 18:53:41 +0530

அலுவலக சான்று நகல் பெற்று அறிந்து கொள்ளாமல், வீண் காலம் கடத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், அய்யாவு என்ற வீரணன் அம்பலத்தின் மனைவியான காளியம்மாள், ஊர்காவலன் அம்பலத்திடமிருந்து புல எண்.96/9ல் வடபுரம் விஸ்தீரணம் 48 செண்டை கடந்த 12.10.1960ம் தேதியில் ஆவண எண்.2775/1960 என்ற பதிவு கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்று, தனித்த பாத்தியத்தில் அனுபவித்து வந்துள்ளதாகவும், மேற்படி பதிவு கிரைய ஆவணத்திலும் காளியம்மாளின் கணவரும், எழுதிக்கொடுப்பவரின் உடன்பிறந்த சகோதரருமான வீரணன் அம்பலம் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளதாகவும், கங்நம 27.06.1966ம் தேதி புல எண்.96/9ல் வடபுரம் விஸ்தீரணம் 48 செண்டை Aditanar Educational Institution அதன் சேர்மேன் ஆன சிவந்தி ஆதித்தன் என்பவருக்கு பதிவு கிரையப்பத்திரம் ஆவண எண்.847/1966 மூலம் காளியம்மாள் கிரையம் கொடுத்துள்ளதாகவும், மேற்படி கிரைய ஆவணத்தில் காளியம்மாளின் மகனான ஆண்டிஅம்பலம் மற்றும் மேலராங்கியன் கிராம பஞ்சாயத்து தலைவர் ரா.க.ராமன் அம்பலமும் சாட்சிகளாக கையெழுத்து செய்துள்ளதாகவும், தாவா மொத்த சொத்தில் புல எண்.96/9ல் வடபுரம் விஸ்தீரணம் 48 செண்டை Aditanar Educational Institution–ன் சேர்மனான சிவந்தி ஆதித்தன் அவர்களிடமிருந்து கடந்த 02.04.1993ம் தேதி பொது அதிகாரப்பத்திரம் மூலம் அதிகாரம் பெற்ற முகவர் ராமசாமி என்பவரிடமிருந்து கடந்த 18.04.1994ம் தேதி பிரதிவாதி கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறதாகவும், மேற்படி சொத்துக்கு பட்டா தவறுதலாக அம்பலம் மற்றும் பால்சாமி வகையறா பெயரில் ஏற்பட்டிருப்பதை ரத்து செய்யக் கோரி சிவகங்கை RDO அவர்களிடம் பட்டா மாறுதல் மேல்முறையீடு மனுவும் 2012ல் தாக்கல் செய்யப்பட்டு ந.க.அ.3/3113/2012 ஆக கோப்புக்கு எடுக்கப்பட்டு, உரிய நடவடிக்கைக்காக வருவாய் கோட்டாட்சியரால் 12.09.2014ல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டு ப.மு.பி.4/1666/2015 ஆக நடவடிக்கை நடந்து பிரதிவாதி பெயருக்கு கடந்த 30.11.2016ம் தேதி புல எண்.96/9A1க்கு பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டது என்றும், தாவா சொத்தில் பகுதி விஸ்தீரணம் 24 செண்டுக்கு மேலராங்கியம் கிராமத்தை சேர்ந்த பொன்னுச்சாமி, செல்லம்மாள் ஆகியோர்கள் இவ்வழக்கின் வாதி இந்திராவின் தகப்பனார் ஆண்டிஅம்பலத்தை 1ம் பிரதிவாதியாகவும், இவ்வழக்கின் வாதி இந்திராவை 2ம் பிரதிவாதியாகவும், இவ்வழக்கு பிரதிவாதியை 3ம் பிரதிவாதியாக காட்டி மு.வ.எண்.111/2017 தாக்கல் செய்து அதில் ஆணையர் நியமனம் கோரி இ.ம.எண்.366/2017 தாக்கல் செய்யப்பட்டு அம்மனு தள்ளுபடியான நிலையில் அசல் வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு மு.வ.எண்.84/2019 ஆக நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இ.ம.எண்.366/2017ல் 12.10.1960ம் தேதியிட்ட ஆவண எண்.2775/1960 மற்றும் 27.06.1966ம் தேதியிட்ட ஆவண எண்.847/1996 ஆகியவற்றின் சார்பதிவக நகல்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்களைப் பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்யாமல், தற்போது ஆவணங்கள் தாக்கல் செய்ய கோர மனுதாரருக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் மு.வ.எண்.84/2019ல் தாக்கல் செய்த ஆவணங்களை நகல் எடுத்தோ, அல்லது மேற்படி ஆவணங்களை வரவழைத்தோ தாக்கல் செய்ய தயாராக உள்ளதாகவும், 07.06.1966ம் தேதியிட்ட ஆவண எண்.847/1996ல் வாதியின் தகப்பனார் சாட்சிக் கையெழுத்து செய்துள்ளதாகவும், மேற்படி ஆவண விபரம் தெரிந்தும் நில அபகரிப்பு செய்ய வேண்டி, 11.09.2009ம் தேதியில் வாதிக்கு மோசடியாக இனாம் செட்டில்மெண்ட் உற்பத்தி செய்துள்ளதாகவும், மேற்படி ஆவணம் பாத்தியம் இல்லாத நிலையில் ஏற்படுத்தப்பட்டது

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.17 18:53:54 +0530

என்பதால் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மனுதாரருக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பு கூடுதல் எதிருரையின் சுருக்கம்:–</u>**

எதிர்மனுதாரர்/எதிர்வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் எதிர்மனுதாரர் கடந்த 18.04.1994ம் தேதியில் பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் மூலமாக ஆதித்தனார் கல்வி நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற முகவரிடமிருந்து கிரையம் பெற்றதாகவும், மேற்படி தாவா சொத்தை C.நடராஜன் என்பவரிடம் ஆவண எண்.1780/2019 என்ற எண்ணில் கடந்த 24.06.2019ம் தேதியில் கிரையம் கொடுத்து மேற்படி நடராஜன் மேற்படி தாவா சொத்தின் அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்து வரி வகையறாக்களை செலுத்தி, அனுபவம் செய்து வருகிறார் என்றும், இந்த எதிர்மனுதாரர் கிரையம் பெற்ற தேதியில் மூல ஆவணங்களை பெற்றாரா இல்லையா என உறுதியாக தெரியவில்லை என்றும், இந்த நம்பர் மனுதாரர் இந்த நம்பர் எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு மட்டும் தாக்கல் செய்து இந்த எதிர்மனுதாரர் மேற்படி அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தபின்னர் மனுதாரர்/வாதி 1961 மற்றும் 1966ம் ஆண்டின் அசல் ஆவணங்களை தாக்கல் செய்ய மனு செய்து அதுவும் இடைநிலை மனு எண்.4/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு மேற்படி மனுவும், எதிர்மனுதாரரை அசல் ஆவணங்களை ஒப்படைக்கக்கோரி சமூக நீதிமன்றம் உத்தரவிட்டு அனுமதிக்கப்பட்டது என்றும், அதனை எதிர்த்து இந்த எதிர்மனுதாரர் சீராய்வு மனு தாக்கல் செய்து மேற்படி சீராய்வு மனுவும் மாண்பமை உயர்நீதிமன்றத்தில் இந்த எதிர்மனுதாரருக்கு ஆதரவாக அனுமதித்து சமூக நீதிமன்றத்திற்கு கீழ்கண்ட உத்தரவை பிறப்பித்தது என்றும்,

"In view of the above, the fair and decreetal order, dated.26.04.2022 passed in IA No.4/2022 is hereby setaside. The matter is remitted back to the trial court for fresh consideration. The Petitioner/Defendant is at liberty to file an additional counter affidavit. The trial court shall dispose of IA No.4/2022 in OS No.221/2019 afresh, based on the specific stand taken by the petitioner/defendant. In the interest of justice, the trial court shall also find out the possibility of calling for the original documents from revenue department, by invoking Rule 75 of Civil Rules of Practice. No cost. Consequently, connected miscellaneous petition is closed."

எனவே எதிர்மனுதாரர் இந்த கூடுதல் எதிருரை தாக்கல் செய்தததாகவும், கடந்த 18.04.1994ம் தேதியிட்ட எதிர்மனுதாரர் கிரையம் வாங்கிய கிரையப்பத்திரத்தை பதிவு செய்தபோது இந்த எதிர்மனுதாரர் ஆதித்தனார் கல்வி நிறுவனத்திடமிருந்து 22 இலக்கச் சொத்துக்களை கிரையம் வாங்கியதாகவும், அப்போது பல்வேறு மூல ஆவணங்களை பெற்றதாகவும், அதனால் தாவா சொத்திற்கான மூல அசல் ஆவணங்களை பெற்றாரா என சரியாக நினைவில்லை என்றும், மேற்படி கிரையமும் 29 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றதால் எதிர்மனுதாரருக்கு கிரையம் கொடுத்த ஆதித்தனார் கல்வி நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற முகவர் தாவா சொத்திற்கான அசல் மூல ஆவணங்களை கொடுத்தாரா இல்லையா என உறுதி செய்ய முடியவில்லை என்றும், தற்போது மேற்படி அதிகாரம் பெற்ற முகவரும் அவருக்கு அதிகாரம் கொடுத்த முதல்வரும் காலமாகிவிட்டதாகவும், எனவே அசல் வழக்கை தாக்கல் செய்தபோது மேற்படி ஆவணத்தின் சான்றிட்ட நகலை எதிர்மனுதாரர் தாக்கல் செய்ததாகவும், மாண்பமை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின்படி civil rules of practiceன் கீழ் அசல்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.17 18:53:59 +0530

ஆவணங்களை விசாரணை காலத்தில் வரவழைத்து பிரச்சனையை தீர்த்துக்கொள்ளலாம் என்றும், எனவே இந்த நிர் மனுவை தள்ளுபடி செய்யவேண்டி கூடுதல் எதிருரை தாக்கல் செய்யப்பட்டது.

4. இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா என்பதே ஆகும்?

5. இருபுறமும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6. மனுதாரர் இந்த நிர் மனுவை ஆர்டர் 12 ரூல் 14ன் கீழ் மனு அபிடவிட்டுடன் தாக்கல் செய்துள்ள பட்டியலில் கண்ட 12.10.1960 மற்றும் 27.06.1966ம் தேதியிட்ட அசல் மூல ஆவணங்களை எதிர்மனுதாரர்/எதிர்வாதி வசம் இருப்பதாகவும், மேற்படி ஆவணங்களில் கிரையம் கொடுத்த கிரையத்தாரர்களின் கையொப்பம் சந்தேகத்திற்குரியதாக உள்ளது என்றும், மேற்படி ஆவணங்களில் கண்ட கையொப்பங்களை வேறு ஒரு நபர் மூலம் forgery ஆக போடப்பட்டுள்ளது என்றும், எனவே மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்ட அசல் ஆவணங்களை தாக்கல் செய்து மேற்படி ஆவணங்களில் உள்ள காளியம்மாள் மற்றும் ஊர்காவலன் ஆகியோரின் கையொப்பங்கள் தானா என்பதை தீர்மானிக்க வேண்டியிருப்பதால் இந்த நிர் மனுவை தாக்கல் செய்திருப்பதாகவும், எதிர்மனுதாரர்/எதிர்வாதியை மேற்படி 12.10.1960 மற்றும் 27.06.1966ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் அசல் ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டுமாய் மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

7. மேற்படி, மனுவில் எதிர்மனுதாரர் தனது எதிருரையில் தாவா மனுவில் கூறிப்பிட்டுள்ள 12.10.1960மற்றும் 27.06.1966ம் தேதிய ஆவணங்கள் பற்றி ஏற்கனவே 16.04.2018ம் தேதி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தெளிவுப்பட தெரிவித்துள்ளதாகவும், மேற்படி ஆவணங்களும் public document ஆக இருந்து வரும் நிலையிம், அவைகளுக்கான சார் பதிவக அலுவலக சான்று நகல் எடுத்து அறிந்துகொள்ளாமல் வேண்டுமென்றே இருந்துவிட்டு தாவா வழக்கு விசாரணையை வீண் காலம் கடத்தவேண்டுமென்ற கெட்ட உள்நோக்கத்தோடு மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவேண்டுமாறு கோரி வீண் அலைக்கழிவாக தாவா மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் தாவா மனு அனுமதிக்கக்கூடியதல்ல என்றும், 12.10.1960ம் தேதியில் காளியம்மாள் ஊர்காவலனிடமிருந்து கிரையம் வாங்கியதாகவும், அதில் காளியம்மாளின் கணவர் வீரணன் சாட்சி கையொப்பம் செய்துள்ளதாகவும், மேற்படி காளியம்மாளுக்கு கிரையம் கொடுத்த ஊர்காவலன் மேற்படி வீரணனின் உடன்பிறந்த சகோதரர் ஆவார் என்றும், காளியம்மாள் தாவா சொத்தை அனுபவித்து வந்து கடந்த 27.06.1966ம் தேதி புல எண்.96/9ல் வடபுரம் விஸ்தீரணம் 48 சென்டை ஆதித்தனார் educational institutionக்காக அதன் சேர்மனான சிவந்தி ஆதித்தன் என்பவருக்கு பதிவு கிரையப்பத்திர ஆவண எண்.847/1966 மூலம் மேற்படி காளியம்மாள் கிரையம் கொடுத்துவிட்டார் என்றும், அதுமுதல் மேற்படி சொத்தும் மேற்படி ஆதித்தனார் educational institutionன் பாத்தியத்திலும், அனுபவத்திலும் இருந்து வந்தது என்றும், மேற்படி ஆவணத்தில் எழுதிக்கொடுக்கும் காளியம்மாளின் மகன் ஆண்டிஅம்பலமும் அப்போதைய மேலராங்கிய கிராம பஞ்சாயத்து தலைவர்

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.10.17 18:54:04 +0530

ரா.க.ராமன் அம்பலமும், சாட்சிகளாக கையெழுத்து செய்துள்ளார்கள் என்றும், மேற்படி ஆண்டிஅம்பலம் என்பவரும் இந்த நம்பர் வழக்கில் வாதி இந்திரா என்பவரின் தகப்பனார் ஆவார் என்றும், மேற்படி ஆதித்தனார் educational institutionன் அதிகாரம் பெற்ற முகவரான ராமசாமி என்பவரிடமிருந்து கடந்த 18.04.1994ம் தேதி இந்த எதிர்மனுதாரர் பதிவு கிரையப்பத்திரம் மூலம் கிரையம் பெற்று கிரையத் தேதி முதல் மேற்படி சொத்தை தன் கைவசம் வைத்து கிரையப்பாத்தியத்தின் அடிப்படையில் அனுபவம் செய்து வருகிறதாகவும், இவ்வழக்கின் வாதி இந்திராவின் தகப்பனார் ஆண்டி அம்பலத்தை 1ம் பிரதிவாதியாகவும், இவ்வழக்கின் வாதி இந்திராவை 2ம் பிரதிவாதியாகவும், இந்த வழக்கின் பிரதிவாதியான இந்த எதிர்மனுதாரரை 3ம் பிரதிவாதியாகவும் தரப்பினராக கண்டு, மேற்படி மேலராங்கியம் கிராமத்தை சேர்ந்த பொன்னுசாமி செல்லம்மாள் ஆகியோர் தாவா சொத்தில் பகுதி விஸ்தீரணமான 24 செண்டுக்கு மானாமதுரை டி.மு. கோர்டில் அ.வ.எண்.111/2017 ஆக வழக்கு தாக்கல் செய்து அதிலும் இந்த எதிர்மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்து வந்த நிலையில், மேற்படி அசல் வழக்கின் வாதிகள் கமிஷன் மனு தாக்கல் செய்து அதுவும் ஐ.ஏ.எண்.366/2017 ஆக இருந்த நிலையில், இந்த எதிர்மனுதாரர் எதிருரை தாக்கல் செய்தபோது அதில் இந்த எதிர்மனுதாரரும் அவரது தரப்பு ஆவணங்களாக இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 1ம் ஆவணமான 12.10.1960ம் தேதிய பதிவு ஆவண எண்.2775/1960ன் சார்பதிவக நகல் மற்றும் 2வது ஆவணமான 27.06.1966ம் தேதிய பதிவு ஆவண எண்.847/1966 ஆகிய ஆவணங்களுக்கு சார்பதிவக நகல் பெற்று அவைகளை தாக்கல் செய்து அவைகளும் முறையே எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்பட்டு மேற்படி அசல் வழக்கும் சமூக நீதிமன்றத்தில் 84/2019 ஆக மாறுதலாகி நிலுவையில் இருந்து வருகிறதாகவும், மேற்படி வழக்கு நடந்து வரும் விபரமும் மேற்படி ஆவணம் தாக்கல் செய்யப்பட்ட விபரமும் மேற்படி வழக்கில் 2ம் பிரதிவாதியாக உள்ள இவ்வழக்கின் வாதி இந்திராவிற்கு நன்கு தெரியும் என்றும், அவ்வாறு உள்ள நிலையில், மேற்படி ஆவணங்களுக்கான நகல்களை மேற்படி வழக்கில் நடவடிக்கை செய்து பெற்று இவ்வழக்கில் தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு தற்போது எதிர்மனுதாரரை ஆவணங்களை தாக்கல் செய்ய கோருவதற்கு யாதொரு உரிமையும் மனுதாரருக்கு சட்டப்படி இல்லையென்றும், மனுவில் குறிப்பிட்டுள்ள 07.06.1966ம் தேதிய ஆவண எண்.847/1966 கிரைய ஆவணத்தில் இவ்வழக்கின் வாதி இந்திராவின் தகப்பனார் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளதாகவும், இதன்மூலம் மேற்படி ஆண்டி அம்பலத்திற்கும், மேற்படி ஆவணத்தில் சாட்சியாக இருந்து ஆவணம் ஏற்பட்டிருக்கும் விபரம் நன்கு தெரிந்திருந்தும், மேற்படி மோசடி உட்கருத்துடன் நில அபகரிப்பு செய்தவற்காக 11.09.2009ம் தேதி தனது மகளான வழக்கின் வாதி இந்திராவிற்கு மோசடியாக இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தை உற்பத்தி செய்து கொடுத்துள்ளார் என்றும், மேற்படி இனாம் செட்டில்மெண்ட் ஏற்பட்ட காலத்தில் தாவா சொத்தில் மேற்படி ஆண்டி அம்பலத்திற்கு எவ்வித பாத்தியமும் இல்லையென்றும், தாவா சொத்தில் பாத்தியமில்லாத ஆண்டி அம்பலத்தால் மேற்படி போலி இனாம் செட்டில்மெண்ட் ஆவணமும் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளதால் அதுவும் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் இல்லையென்றும், தாவா இடைநிலை மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தாவா சொத்தில் உரிமையோ பாத்தியமோ அனுபவமோ இல்லாத வாதி சமர்ப்பிக்கக்கோர முடியாது என்றும், எனவே தாவா மனுவை அனுமதிக்க சட்டப்படியான தகுந்த முகாந்திரம் இல்லையென்ற அடிப்படையில் தள்ளுபடி செய்யவேண்டுமாய் எதிருரை தாக்கல் செய்து வாதுரையில்

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.17 18:54:09 +0530

எடுத்துரைக்கப்பட்டது.

8. இம்மனுவில் ஏற்கனவே விசாரணை நடைப்பெற்று மனுவில் பட்டியலில் கண்ட ஆவணங்களின் சார்பதிவக நகலை வைத்து அந்த ஆவணங்களில் கண்ட கையொப்பத்தின் உண்மை தன்மை உறுதி செய்திட முடியாது என்ற அடிப்படையில், மேற்படி 12.10.1960 மற்றும் 27.06.1966ம் தேதிய அசல் ஆவணங்களை எதிர்மனுதாரரை தாக்கல் செய்ய இந்த இடைநிலை மனுவில் கடந்த 26.04.2022ம் தேதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதனை எதிர்த்து இந்த எதிர்மனுதாரர் சீராய்வு மனு தாக்கல் செய்து அதில் ஏற்பட்ட உத்தரவின் அடிப்படையில் எதிர்மனுதாரருக்கு தகுந்த வாய்ப்பளித்து கூடுதல் எதிருரை தாக்கல் செய்ய உத்தரவிட்டும் மீண்டும் மனுவை விசாரணை செய்யவும் மேற்படி ஆவணங்களை வருவாய்துறையிலிருந்து வரவழைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள உத்தரவிட்டும் மேற்படி சீராய்வு மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இந்த இடைநிலை மனு மீண்டும் கடந்த 04.01.2023ம் தேதியில் கோப்பிற்கு எடுக்கப்பட்டது. மேலும், இம்மனு நிலுவையில் இருந்தபோது மாண்பமை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவில் வருவாய் துறையிலிருந்து ஆவணங்களை வரவழைக்கவும் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என உத்தரவிட்டதன் பேரில் ரூல் 75 civil rules of practice ன் கீழ் பிரிதொரு மனு தாக்கல் செய்யப்பட்டு அதுவும் ஐ.ஏ.14/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு முழு விசாரணைக்குப் பின்னர் கடந்த 06.06.2025ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது. மீண்டும் இம்மனு கடந்த 01.09.2025ம் தேதியில் விசாரணைக்கு வந்தபோது இருதரப்பு வாதங்களையும் கேட்டு உத்தரவுக்காக போடப்பட்டிருந்த நிலையில் கடந்த 08.09.2025ம் தேதி இந்த நிர் மனுவில் பிரதிவாதி தாவா சொத்தை கிரையம் வாங்கிய சமயத்தில் இம்மனு அபிடவிட்டுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்டியலில் கண்ட ஆவணங்களை எதிர்மனுதாரர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டதாக இந்த எதிர்மனுதாரர் கிரையம் வாங்கிய 18.04.1994ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் மேற்படி கிரைய ஆவணத்தையும் மாண்பமை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவையும் குறியீடு செய்யவேண்டுமென சொல்லி மீண்டும் இம்மனுவை கோப்பிற்கு எடுக்கவும், ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுமாகவும், இருமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு அதுவும் முழு விசாரணைக்குப் பின்னர் 09.10.2025ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு இம்மனு உத்தரவுக்காக போடப்பட்டுள்ளது.

9. இவ்வழக்கின் கோப்பினை பரிசீலனை செய்த வகையில், இவ்வழக்கும் கடந்த 03.04.2017ம் தேதி மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்து பின்பு இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் அசல் வழக்கும் விசாரணை பட்டியலில் இடப்பட்டு பின்பு இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்த நிலையில் இந்த நம்பர் எதிர்வாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னர் வழக்கை விளம்புகை பரிகாரத்திற்கு திருத்தம் செய்யவேண்டுமாக மனு செய்து அதுவும் அனுமதிக்கப்பட்டு அதன் பேரில் தாவா வழக்கும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த நம்பர் மனுவில் ஏற்பட்ட உத்தரவிற்கு எதிராக எதிர்மனுதாரர் சீராய்வு மனு தாக்கல் செய்து அதில் ஏற்பட்ட உத்தரவின் அடிப்படையில் கூடுதல் எதிருரை எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதனை பரிசீலனை செய்கையில் தாவா சொத்தை கடந்த

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.17 18:54:14 +0530

24.06.2019ம் தேதியில் சி.நடராஜன் என்பவருக்கு இந்த எதிர்மனுதாரர்/எதிர்வாதி கிரையம் கொடுத்துள்ளார் என்பதையும், அவரையும் தரப்பினராக சேர்க்கவேண்டுமாய் இந்த எதிர்மனுதாரர் தரப்பில் மனு செய்து அதுவும் முழு விசாரணைக்குப் பின்னர் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பதை வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் அறிய முடிகிறது. எதிர்மனுதாரர் தனது கூடுதல் எதிருரையில் தாவா சொத்தோடு சேர்த்து ஆதித்தனார் Educational institutionயிடம் இருந்து 22 இலக்கச் சொத்துக்களை கிரையம் வாங்கியதாகவும், நிறைய மூல பத்திரங்கள் பெற்றதாகவும் அதனால் தாவா சொத்திற்கான மூல ஆவணத்தை பெற்றாரா என தனக்கு சரியாக நினைவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் எதிர்மனுதாரர் தனது எதிருரையில் மனுவில் கோரியுள்ள ஆவணங்கள் தன் வசம் இல்லையென்று சொல்லிவிட்டு தற்பொழுது அந்த மூல ஆவணத்தை ஆதித்தனார் Educational Institution முகவரிடமிருந்து பெற்றேனா என சரியாக நினைவில்லையென்று தெரிவித்துள்ளதாகவும் அது ஏற்றுக்கொள்ளும் வகையில் அமையவில்லை என்றும் தனது வாதுரையில் எடுத்துரைத்தார்.

11. தற்பொழுது வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில், ஏற்கனவே இவ்வழக்கு சமூக நீதிமன்றத்திற்கு மாறுதலாகிய பின்னர் கடந்த 02.12.2019ம் தேதியிட்டு விசாரணை பட்டியலில் போடப்பட்டு பின்பு நீக்கப்பட்டப்பின்னர் மீண்டும் 2022ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் விசாரணை பட்டியலில் போடப்பட்டப் பின்னர் இம்மனு உட்பட பல்வேறு மனுக்களும் அதன் விசாரணை நடவடிக்கைகளும் நடந்துவந்த வண்ணம் இருந்து வந்ததால் தற்போது வரை இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவில்லை என்பதை அறிய முடிகிறது. மேலும், மனுதாரர் தனது மனு அபிடவிட்டில் ஊர்காவலன் மற்றும் காளியம்மாளின் கையொப்பம் forgery ஆக போடப்பட்டுள்ளது என தெரிவித்துள்ள நிலையில், மேற்படியார்களின் ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பம் அடங்கிய ஆவணங்களை சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் இந்த நிர் மனுவை மட்டும் மேற்கண்ட 12.10.1960 மற்றும் 27.06.1966ம் தேதியிட்ட 2 அசல் ஆவணங்களை மட்டும் எதிர்மனுதாரரை தாக்கல் செய்ய கோரியிருப்பதும் இம்மனு தீர்மானிப்பதற்குள் பல்வேறு மனு நடவடிக்கைகள் இவ்வழக்கில் நடந்திருப்பதை வைத்து பார்க்கும்போது வழக்கை இழுத்தடிக்கும் நோக்கதிலேயே மனு மேல் மனுவாக தாக்கல் செய்திருப்பதாக தெரிய வருகிறது. மேற்கண்ட இரண்டு ஆவணங்களும் தன் வசம் இல்லையெனவும் தான் வாங்கினேனா என்று நினைவில்லை என்று எதிர்மனுதாரர் சொல்லியுள்ள நிலையில், அதனை தாக்கல் செய்ய சொல்லியே ஏறத்தாழ 3 ஆண்டுகளுக்கு மேல் இம்மனு நடவடிக்கையே மாறி மாறி நடைபெற்று வருகிறது. மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு தேவைப்படும் பட்சத்தில் அதனை எதிர்மனுதாரர் விசாரணை காலத்தில் தாக்கல் செய்ய வாய்ப்புள்ள நிலையிலும், ஏற்கனவே நடைபெற்ற மானாமதுரை டி.மு.கோர்ட் அ.வ.எண்.111/2017ல் இடைநிலை மனு எண்.366/2017 விசாரணையில் இந்த நம்பர் எதிர்மனுதாரர் சான்றிட்ட நகலையே தாக்கல் செய்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. நிலைமை இவ்வாறு இருக்க இம்மனு நடவடிக்கையினால் அசல் வழக்கும் மேல்நடத்த முடியாத சூழ்நிலையை கருத்தில் கொண்டும், மேற்கண்ட 2 ஆவணங்களும் எதிர்மனுதாரர் தரப்பிற்கு மூல ஆவணம் என்ற அடிப்படையில் அதனை அவர் விசாரணை காலத்தில் தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது என்ற அடிப்படையிலும்,

VENKADESHPRASANTH
Digitally signed by VENKADESHPRASANTH
Date: 2025.10.17 18:54:20 +0530

ஊர்காவலன் மற்றும் காளியம்மாளின் ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பம் அடங்கிய ஆவணத்தை சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத நிலையில், இந்நிர் மனுவை தற்போதைய வழக்கு சூழ்நிலையில் அனுமதிக்கவேண்டிய அவசியமில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரரின் மனு அசல் வழக்கு நடவடிக்கைகளை காலதாமதப்படுத்தும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற அடிப்படையில் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ம் வருடம் அக்டோபர் மாதம் 17–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.17 18:54:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:இல்லை

VENKADESHPRASANTH Digitally signed by VENKADESHPRASANTH Date: 2025.10.17 18:54:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை
நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்
IA No.4/2022 in OS no.221/2019
உத்தரவு
நாள்:17.10.2025